# தேசிய தின கொண்டாட்டங்களில் மொரிஷியஸின் மிக உயர்ந்த மக்கள் விருதை பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் பெற்றார் (மார்ச் 12, 2025)

மார்ச் 12, 2025

மொரிஷியஸ் குடியரசின் 57-வது தேசிய தின கொண்டாட்டங்களில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமை விருந்தினராக கலந்துகொண்டார்.

2. கொண்டாட்டங்களின் போது, மொரிஷியஸ் குடியரசுத் தலைவர் மாண்புமிகு திரு. தரம்பீர் கோகுல், பிரதமர் மோடி அவர்களுக்கு மொரிஷியஸின் மிக உயர்ந்த மக்கள் விருதான, ஸ்டார் ஆண்ட் கீ ஆஃப் இந்தியன் ஓஷன் (G.C.S.K) விருதை வழங்கினார்.  இந்த விருதை இந்தியத் தலைவர் ஒருவர் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

3. இந்தியாவிற்கும், மொரிஷியஸிற்கும், இந்தியாவின் 1.4 பில்லியன் மக்களுக்கும், மொரிஷியஸில் உள்ள 1.3 மில்லியன் சகோதர சகோதரிகளுக்கும் இடையிலான சிறப்பு நட்புக்கு பிரதமர் மோடி இந்த விருதை அர்ப்பணித்தார்.

4. தேசிய தின கொண்டாட்டங்களில், இந்திய கடற்படை அணிவகுப்பு குழு அணிவகுப்பில் கலந்துகொண்டது. ஒரு இந்திய கடற்படைக் கப்பலும் தேசிய தின கொண்டாட்டங்களுக்காக துறைமுகம் வந்திருந்தது.

போர்ட் லூயிஸ்

மார்ச் 12, 2025